# வரவு செலவுத் திட்ட வாக்குறுதிகள்: பாராளுமன்றத்திற்கு அப்பால்

2019 இறுதி ஆண்டு மதிப்பீடு

அக்டோபர் 2021

© Verité Research

## உள்ளடக்க அட்டவணை


"வரவு செலவுத் திட்ட வாக்குறுதிகள்: பாராளுமன்றத்திற்கு அப்பால்" 3

செயற்படும் விதம் 3

1. செலவீன முன்மொழிவுகள் 5

1.1. வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் 5

1.2. அரச நிறுவனங்களுக்கான வெளிப்படைத்தன்மை தரவரிசை 6

1.3. முன்னேற்றக் கண்காணிப்பான் 7

2. கொள்கைத் திட்டங்கள் 9

2.1. முன்னேற்றக் கண்காணிப்பான் 9

3. முன்னேற்றம், திறந்த நிலை மற்றும் தரவரிசை மதிப்பீடுகளின் விவரங்கள். 11

## *“வரவு செலவுத் திட்ட வாக்குறுதிகள்: பாராளுமன்றத்திற்கு அப்பால்”*

**“வரவு செலவுத் திட்ட வாக்குறுதிகள்: பாராளுமன்றத்திற்கு அப்பால்”** என்பது அரசாங்கம் அதன் வருடாந்த வரவு செலவுத் திட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதை பின்தொடர்ந்து கவனிக்கும் ஒரு முன்னோடி இணைய மேடையாகும்.

2017 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த இணைய மேடை, அரசாங்கத்தின் வருடாந்த வரவு செலவுத்திட்ட உரை சம்பந்தமான இரண்டு அடிப்படையான கேள்விகளுக்கு பதிலளிக்க முனைகின்றது.

(i) அரசாங்கம் சொல்வதை செய்கின்றதா?
(ii) அரசாங்கம் செய்வதை சொல்கின்றதா?

இக்கேள்விகளுக்கான பதில்களை பகிரங்கமாக வழங்குவதன் மூலம், இந்த இணைய மேடை பின்வருவனவற்றை அடைய முயல்கின்றது.

(i) அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்ட வாக்குறுதிகளின் வெளிப்படை தன்மையை மேம்படுத்தல்
(ii) இவ்வாக்குறுதிகளுக்கு அரசாங்கத்தை பொறுப்பாளி ஆக்குதல்

## *செயற்படும் விதம்*

BudgetPromises.Org இணைய மேடையானது, வரவு செலவுத் திட்ட உரையில் உள்ள ரூ.500 மில்லியனுக்கு மேற்பட்ட புதிய செலவின முன்மொழிவுகளை அல்லது ‘வாக்குறுதிகளை’ கண்காணிக்கிறது. (இம்முன்மொழிவுகளை வரவு செலவுத் திட்ட உரையின் பின்னிணைப்பு 2 இல் காணலாம்). 2019 ஆம் ஆண்டில், செலவீன ஒதுக்கீடு இல்லாத சட்டங்கள் மற்றும் விதிமுறைகளில் ஏற்படும் மாற்றங்கள் போன்ற கொள்கை முன்மொழிவுகளையும் இந்த இணைய மேடையானது கண்காணிக்க ஆரம்பித்தது.

| ஆண்டு | செலவீன முன்மொழிவுகள் | | | கொள்கை முன்மொழிவுகள் |
|---|---|---|---|---|
| | தெரிவு செய்வதற்கான அளவுகோல்**1** | முன்மொழிவுகளின் எண்ணிக்கை | திட்டங்களின் மொத்த மதிப்பு | முன்மொழிவுகளின் எண்ணிக்கை |
| 2017 | ரூ.1பில்லியனுக்கு மேற்பட்டது | 37 | ரூ. 116,910 மில்லியன் | எதுவுமில்லை |
| 2018 | ரூ.1பில்லியனுக்கு மேற்பட்டது | 38 | ரூ. 149,350 மில்லியன் | எதுவுமில்லை |
| 2019 | ரூ.500 மில்லியனுக்கு மேற்பட்டது | 37 | ரூ. 100,875 மில்லியன் | 22 |

இந்த இணைய மேடையானது வருடத்துக்கு இரண்டு தடவைகள் புதுப்பிக்கப்படும், அத்துடன் ஒவ்வொரு செலவீன முன்மொழிவும் இரண்டு குறிகாட்டிகளைப் பயன்படுத்தி மதிப்பிடப்படுகின்றது: **வெளிப்படைத்தன்மை** மற்றும் **முன்னேற்றம்**. கொள்கைத் திட்டங்கள் நிறைவேற்றப்படுவது ஒரே ஒரு குறிகாட்டியான **முன்னேற்றத்தை** மாத்திரம் பயன்படுத்தி கண்காணிக்கப்படுகின்றது. கொள்கைத் திட்டங்களின் நிலை, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட கோரிக்கைகளில் தங்கியிருக்காமல், முக்கியமாக பொதுவெளியில் கிடைக்கும் தகவல்களைப் பயன்படுத்தி மதிப்பிடப்படுகின்றது. எனவே, கொள்கைத் திட்டங்களின் மதிப்பீடானது வெளிப்படைத்தன்மை குறிகாட்டியைக் கொண்டிருக்கவில்லை.

முதல் ஆறு மாதங்களுக்கான, வருட நடுப்பகுதி செயல்திறன் மதிப்பீடானது அக்டோபர் மாதத்தில் வெளியிடப்படும். அதேவேளை, முழு வருடத்திற்கான ஆண்டிறுதி செயல்திறன் மதிப்பீடானது தொடர்ந்து வரும் வருடத்தின் ஏப்ரல்/மே மாதங்களில் வெளியிடப்படுகின்றது[2].

[1] 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் தெரிவு செய்வதற்கான அளவுகோல், திட்டத்திற்காக முன்மொழியப்பட்ட செலவின ஒதுக்கீட்டை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டிருந்தது. 2019 ஆம் ஆண்டில் வரவு செலவுத்திட்ட உரையின் அறிக்கையிடும் வடிவம் மாறியதனால், தெரிவுசெய்வதற்கான அளவுகோல் முன்மொழியப்பட்ட செலவின ஒதுக்கீடு மற்றும் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட தொகையை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

[2] 2019 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட உரை தாமதமானதுடன், 2019 மார்ச் மாதத்திலேயே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. எனவே 2019 ஆம் ஆண்டில் ஆண்டிறுதி மதிப்பீடு மாத்திரமே முன்னெடுக்கப்பட்டது.

# *1. செலவீன முன்மொழிவுகள்*

## *1.1. வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான்*

இச்சுட்டியானது ஒவ்வொரு வாக்குறுதி தொடர்பாகவும் அரசாங்கம் தான் செய்வது பற்றி எந்தளவு வெளிப்படுத்துகிறது என்பதைக் கண்காணிக்கிறது. இக்கண்காணிப்பான் ஆனது, ஒவ்வொரு வாக்குறுதிகளையும் நடைமுறைப்படுத்துவது தொடர்பான தகவல்களை வழங்குவதில் காணப்படும் அரசாங்கத்தின் வெளிப்படைத் தன்மையின் நிலையை அளவிடுகின்றது. அரசாங்க இணையத்தளங்கள் மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட கோரிக்கைகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களை கண்காணிப்பான் பயன்படுத்துகின்றது. 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் அரசாங்க நிறுவனங்களுக்கு விஜயம் செய்தும், முறைசாரா கோரிக்கைகளின் மூலமாகவும் தகவல்கள் திரட்டப்பட்டன. எனினும், இந்த தகவல் சேகரிக்கும் முறை நிறுத்தப்பட்டுள்ளது.

வருட நடுப்பகுதி மதிப்பீடானது, ஒவ்வொரு வாக்குறுதியினதும் முதல் ஆறு மாதத்திற்கான முன்னேற்றம் தொடர்பான தகவல்களை வழங்குவதில் காணப்பட்ட அரசாங்கத்தின் வெளிப்படைத் தன்மையின் அளவை மதிப்பிடுகின்றது. ஆண்டிறுதி மதிப்பீடானது, முழு வருடத்திற்குமான முன்னேற்றம் தொடர்பான தகவல்களை வழங்குவதில் காணப்பட்ட வெளிப்படைத் தன்மையின் அளவை மதிப்பிடுகின்றது.

மதிப்பீட்டின் போது கிடைக்கும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வெளிப்படைத்தன்மை பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றது:

| | |
|---|---|
| வெளிப்படையற்றது | - வாக்குறுதியின் முன்னேற்றதைப்பற்றித் தீர்மானிப்பதற்கு தேவையான எவ்வித தகவலும் இல்லை. |
| மட்டுப்படுத்தப்பட்டது | - கண்காணிக்கப்படும் கால இடைவெளியில் ஒரு முழுமையான மதிப்பீட்டை வழங்குவதற்குப் போதுமான தகவல்கள் இருக்கவில்லை. |
| ஒத்துழைக்கப்படாதது | - வாக்குறுதியின் முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் கடும் முயற்சியினால் பெறப்பட்டது அல்லது கடும் முயற்சியினால் மதிப்பிடப்பட்டது. |

| | | |
|---|---|---|
| ஒத்துழைக்கப்பட்டது | - வாக்குறுதியின் முன்னேற்றம் தொடர்பான வேண்டுகோள்களுக்கு, தகவல்கள் காலதாமதமின்றி வழங்கப்பட்டது. |
| வெளிப்படையானது | - வாக்குறுதியின் முன்னேற்றம் தொடர்பான முழுத் தகவல்களும் முன்வந்து வெளிப்படுத்தப்பட்டது. |

### *1.2. அரச நிறுவனங்களுக்கான வெளிப்படைத்தன்மை தரவரிசை*

அரச நிறுவனங்கள் தாங்கள் பொறுப்பேற்றுள்ள வாக்குறுதிகள் தொடர்பாக தகவல்களை வெளியிடுவதில் உள்ள வெளிப்படைத்தன்மையை ஒப்பிட்டு தரவரிசையை இது வழங்குகின்றது. ஒவ்வொரு நிறுவனமும் 0 முதல் 100 வரையில் மதிப்பெண்களைப் பெற்றுக்கொள்ளும், 100 என்பது உயர்ந்த பட்ச வெளிப்படைத்தன்மையை குறிக்கின்றது. அதன் பின்னர் அரச நிறுவனங்கள் மதிப்பெண்கள் அதிகமானது முதல் குறைவானது வரை தரவரிசைப்படுத்தப்படும், குறித்த ஆண்டில் அவற்றின் செயல்திறனை இது வெளிப்படுத்துகின்றது.

நிறுவனத்தின் கீழ் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் ஒவ்வொன்றுக்குமான மதிப்பெண்களின் சராசரியைக் கணக்கிடுவதன் மூலம் அரச நிறுவனத்தின் மொத்த புள்ளிகள் கணக்கிடப்படுகின்றன. ஒவ்வொரு வாக்குறுதியும் 0 முதல் 100 வரை மதிப்பெண்களைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு தனிப்பட்ட வாக்குறுதிக்குமான மதிப்பெண்கள் கீழ்வருவனவற்றின் அடிப்படையில் கணக்கிடப்படும். (1) வாக்குறுதியின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதில் தகவல்களின் பயன்பாட்டுத்தன்மை (2) தகவல்களைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் இலகுத்தன்மை.

தகவலின் பயன்பாடு: கிடைத்த தகவல்கள் முழுமையாக பயன்படுத்தப்படக்கூடியவை, பகுதியளவில் பயன்படுத்தப்படக்கூடியவை அல்லது பயன்படுத்த முடியாதவை என்ற அடிப்படையில் ஒவ்வொரு வாக்குறுதிக்கும் 100, 50 அல்லது 0 என்ற ஆரம்ப மதிப்பெண்கள் வழங்கப்படும்.

தகவல்களைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் இலகுத்தன்மை: பயன்பாட்டிற்காக வழங்கப்பட்ட ஆரம்ப மதிப்பெண், தகவல்களைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் இலகுத்தன்மைக்கு ஏற்ப மாற்றப்படுகின்றது. தகவல்கள் கோரப்பட்டதன் பின்னர் வழங்கப்படும், அதாவது தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட கோரிக்கைகளின் மூலமாக பெறப்படும் தகவல்களுடன் ஒப்பிடுகையில், தகவல்களைக் கோருவதற்கு முன்னரே அவற்றை வழங்கும், அதாவது

ஒன்லைன் மூலம் வழங்கப்படும் தகவல்களுக்கு அதிக மதிப்பெண்கள் வழங்கப்படும்.




### *1.3. முன்னேற்றக் கண்காணிப்பான்*

இந்தச் சுட்டியானது அரசாங்கம் தாம் செய்வதாக சொல்பவற்றை எந்தளவுக்கு செய்கிறது என்பதைக் கண்காணிக்கின்றது. இது அரசாங்கம் அதன் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக அரசாங்கத்தினாலேயே நிர்ணயிக்கப்பட்ட நேர அட்டவணை மற்றும் மைல் கற்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு அதன் முன்னேற்றத்தை மதிப்பிடுகின்றது

ஒரு வாக்குறுதியின் வருட நடுப்பகுதி மதிப்பீடானது பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றது:

| | | |
|---|---|---|
|  | தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | - வாக்குறுதி சம்பந்தமாக எவ்வித தகவல்களும் இன்மை, அல்லது காணப்படும் தகவலினால் எவ்வித உபயோகமும் இன்மை. |
|  | கைவிடப்பட்டுள்ளது | - வாக்குறுதி கைவிடப்பட்டுள்ளது அல்லது பிற்போடப்பட்டுள்ளது. அத்துடன் அதன் அமுலாக்கம் கண்காணிக்கப்படும் காலஇடைவெளியில் திட்டமிடப்படாது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| புறக்கணிப்பட்டுள்ளது | - வாக்குறுதி அமுல்படுத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது, ஆனால் திட்டமிட்டபடி ஆரம்பிக்கப்படவில்லை |
| பின்தங்கியுள்ளது | - வாக்குறுதி அமுல்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது, ஆனால் திட்டமிடப்பட்ட காலஅட்டவணையுடன் ஒப்பிடும் போது பின்தங்கியுள்ளது. |
| முன்னேறியுள்ளது | - வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றதுடன் குறித்த இலக்கை குறிப்பிடப்பட்ட நேரத்தினுள் அல்லது அதற்கு முன்னர் அடைவதற்கான நிலையில் காணப்படுகின்றது.[3] |

ஒரு வாக்குறுதியின் ஆண்டிறுதி மதிப்பீடானது பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றது:

| | |
|---|---|
| தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | - வாக்குறுதியின் நிலைமையை தீர்மானிப்பதற்குரிய தகவல்கள் வழங்கப்படவில்லை. அல்லது வழங்கப்பட்ட தகவல் போதுமானதாகவோ உபயோகமானதாகவோ இருக்கவில்லை. |
| கைவிடப்பட்டுள்ளது | - வாக்குறுதியில் எவ்வித முன்னேற்றமும் இல்லை, அல்லது வாக்குறுதியானது அமுலாக்கல் திட்டத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளது. |
| முன்னேற்றம் அற்றது | - வாக்குறுதியின் முன்னேற்றம் இலக்கில் 33% க்கும் குறைவாக அடையப்பட்டுள்ளது. |

[3] ஒரு குறிப்பிட்ட வாக்குறுதி ஜூன் 30 2019 அன்றைக்கு இலக்கிடப்பட்ட அடைவின் 90% இனை அடைந்திருக்கும் பட்சத்தில் அவ்வாக்குறுதி முன்னேற்றகரமானது என வகைப்படுத்தப்படுகின்றது

| | |
|---|---|
| பகுதியளவு நிறைவேறியது | - வாக்குறுதியின் முன்னேற்றம் இலக்கில் 33% க்கும் குறைவாக அடையப்பட்டுள்ளது. |
| கணிசமானளவு நிறைவேறியது | - வாக்குறுதியின் முன்னேற்றம் இலக்கில் 66% க்கும் 80% க்கும் இடையில் அடையப்பட்டுள்ளது. |
| முற்றாக நிறைவேறியது | - வாக்குறுதியின் முன்னேற்றம் இலக்கில் 80% க்கும் அதிகமாக அடையப்பட்டுள்ளது. |

## *2. கொள்கைத் திட்டங்கள்*

வரவு செலவுத்திட்ட உரையில் அரசாங்கம் உறுதியளிக்கும் கொள்கைகளின் முன்னேற்றங்களைக் கண்காணிக்கும் வகையில் 2019 ஆம் ஆண்டில் budgetpromises.org தனது நோக்கத்தை விரிவாக்கிக் கொண்டது. இந்த திட்டங்களுக்கு எந்த செலவின ஒதுக்கீடும் இல்லை.

'நிறைவேற்றப்பட்டது' அல்லது 'பகுதியளவில் நிறைவேற்றப்பட்டது' எனக் கருதப்படுவதற்கு சட்ட ரீதியான செயற்பாடு அல்லது ஒழுங்குமுறை அறிவிப்பு (வர்த்தமானி) தேவைப்பட்ட திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டன. பகிரங்கமாக பொதுவெளியில் கிடைக்கும் தகவல்கள் அதாவது வர்த்தமானி அறிவித்தல்கள், அரசாங்க சுற்றறிக்கைகள் மற்றும் அமைச்சரவை முடிவுகள் தொடர்பான அரசாங்க தகவல் திணைக்கள அறிக்கைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தியே திட்டங்களை நிறைவேற்றுவதில் உள்ள முன்னேற்றம் தொடர்பில் மதிப்பிடப்படுகின்றது. கொள்கை தொடர்பில் எந்தவித தகவலும் பகிரங்கமாக கிடைக்காத சந்தர்ப்பத்தில், கடிதங்கள், தொலைபேசி அழைப்புக்கள் மற்றும் மின்னஞ்சல் மூலமாக அமைச்சுக்களிடம் நேரடியாகத் தொடர்பு கொள்ளப்பட்டது.

### *2.1. முன்னேற்றக் கண்காணிப்பான்*

வரவு செலவுத்திட்ட உரையில் அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கைத் திட்டங்களை செயற்படுத்துவதில் அரசாங்கம் முன்னெடுத்த முன்னேற்றத்தின் அளவினை இது கண்காணிக்கின்றது.

| | |
|---|---|
| தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | - வாக்குறுதி சம்பந்தமாக எவ்வித தகவல்களும் இன்மை, அல்லது காணப்படும் தகவலினால் எவ்வித உபயோகமும் இன்மை. |
| நிறைவேற்றப்படவில்லை | - திட்டத்தின் எந்தவொரு பகுதிக்கும் தேவைப்படும் சட்டம் அல்லது ஒழுங்குமுறை அறிவித்தல்கள் (வர்த்தமானி) வெளியிடப்படவில்லை. இதனை சம்மந்தப்பட்ட அமைச்சு/அரச நிறுவனம் எழுத்து மூலம் உறுதிப்படுத்தியுள்ளது. |
| பகுதியளவில் நிறைவேற்றப்பட்டுள்ளது | - திட்டத்தின் முழுமைக்கும் அன்றி ஒரு சில பகுதிகளுக்கு, தேவைப்படும் சட்டம் அல்லது ஒழுங்குமுறை அறிவித்தல் (வர்த்தமானி) வெளியிடப்பட்டுள்ளது |
| நிறைவேற்றப்பட்டுள்ளது | - கொள்கைத் திட்டமானது முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளது. திட்டத்தின் முழுமைக்கும் தேவைப்படும் சட்டம் அல்லது ஒழுங்குமுறை அறிவித்தல் (வர்த்தமானி) வெளியிடப்பட்டுள்ளதுடன், மேலதிக எந்த நடவடிக்கையும் தேவையில்லை. |

## 3. முன்னேற்றம், திறந்த நிலை மற்றும் தரவரிசை மதிப்பீடுகளின் விவரங்கள்.

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி உத்தரவாத நிதியமொன்றினைத் தாபித்தல் | ஒத்துழைக்கப்பட்டது | முற்றாக நிறைவேறியது | நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை மேம்பாட்டு அமைச்சு |
| | நிகழ்ச்சித்திட்டம் மூலமாகவும், மற்றும் 2016ஆம் ஆண்டு தகவல் அறியும் சட்டத்தின் 12ஆம் இலக்கத்துக்கமைய மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்திற்கு மறுமொழியாகவும் முன்னேற்றத்துக்கான தரவுகள் கிடைக்கப்பெற்றன. | கிடைக்கப்பெற்ற தரவுகளின்படி 31 டிசம்பர் 2019 வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றத்தின் அளவு 2019 ஆம் ஆண்டுக்கான இலக்கின் 100% ஆகும். ஆரம்பத்தில் ADBயுடன் இணைந்து ஒரு தேசிய கடன் உத்தரவாத நிறுவனம் (NCGI) ஒன்றை தாபிப்பதே திட்டமாக இருந்ததாக | 2019 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட 16 அரச நிறுவனங்களில் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு கூட்டாக முதலாவது |

| வரவு செலவுத் திட்ட வா க்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்கா ணிப்பான் | முன்னேற்றக் கண்கா ணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | | அமைச்சு தெரிவித்தது. ஆனால், இதனை தாபிக்கும் செயல்முறையில் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக மத்திய வங்கியின் கீழ் ரூ. 500 மில்லியன் ஒதுக்கீட்டில் ஒரு கடன் உத்தரவாதத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இது பின்னர் NCGIக்கு மாற்றப்படுவதே நோக்கமாக இருந்தது. வரவுசெலவுத்திட்ட உரையின்படி ரூ. 500 மில்லியன் ஒதுக்கீட்டுடன் மத்திய வங்கியின் கீழ் ஒரு நிதியத்தை தாபிப்பதே நோக்கமாக இருந்தமையினால் இப்பரிந்துரை பூரணப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுகின்றது. | இடத்தைப் பெற்றுள்ளது. அமைச்சினால் பெறப்பட்ட சராசரி 75 புள்ளிகளின் அடிப்படையில் இந்த தரவரிசை தீர்மானிக்கப்பட்டது (ஒதுக்கீட்டின் அடிப்படையில் சராசரி). 2019 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட இந்த அமைச்சின் கீழ் வரும் 5 திட்டங்களுக்கான தகவல்களை வெளிப்படுத்தியதை அடிப்படையாகக் கொண்டு |

| வரவு செலவுத் திட்ட வா க்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்கா ணிப்பான் | முன்னேற்றக் கண்கா ணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | | | இந்தப் புள்ளி வழங்கப்பட்டுள் ளது. |
| நங்வமு லங்கா”எனும் தொனிப்பொருளில் நுண் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத் | வெளிப்படையற்றது | தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சு |
| | 2016ஆம் ஆண்டு தகவல் அறியும் சட்டத்தின் 12ஆம் இலக்கத்துக்கமைய. | வாக்குறுதியின் முன்னேற்றத்தைக் கணிக்கத் தேவையான எவ்விதத் தகவலும் இல்லை | 2019 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட 16 அரச நிறுவனங்களில் கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சு கூட்டாக இறுதி இடத்தைப் பிடித்துள்ளது. அமைச்சினால் பெறப்பட்ட சராசரி 0 புள்ளிகளின் அடிப்படையில் இந்த தரவரிசை தீர்மானிக்கப்பட்ட து (ஒதுக்கீட்டின் |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | | | அடிப்படையில் சராசரி). 2019 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட இந்த அமைச்சின் கீழ் வரும் 3 திட்டங்களுக்கான தகவல்களை வெளிப்படுத்தியதை அடிப்படையாகக் கொண்டு இந்தப் புள்ளி வழங்கப்பட்டுள்ளது |
| பாடசாலை மாணவர்களுக்கு இலவச குவளைப் பால் | ஒத்துழைக்கப்படாதது | முற்றாக நிறைவேறியது | கல்வி அமைச்சு |
| | நிகழ்ச்சித்திட்டம் மூலமாகவும், மற்றும் 2016ஆம் ஆண்டு தகவல் அறியும் சட்டத்தின் 12ஆம் இலக்கத்துக்கமைய மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்திற்கு மறுமொழியாகவும் முன்னேற்றத்துக்கான தரவுகள் | கிடைக்கப்பெற்ற தரவுகளின்படி 31 டிசம்பர், 2019 வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றத்தின் அளவு 2019 ஆம் ஆண்டுக்கான இலக்கின் 86% ஆகும். இந் | 2019 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட 16 அரச நிறுவனங்களில் கல்வி அமைச்சு ஏழாவது இடத்தைப் பிடித்துள்ளது. அமைச்சினால் பெறப்பட்ட சராசரி |

| வரவு செலவுத் திட்ட வா க்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்கா ணிப்பான் | முன்னேற்றக் கண்கா ணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | கிடைக்கப்பெற்றன. எனினும் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் முன்னேற்ற அறிக்கை ஆகியவை சரியான அறிக்கையிடல் கட்டமைப்பைப் பின்பற்றாதபடியினால் அவற்றை ஒழுங்கமைக்க முடியவில்லை. ஆகையால், எமது விண்ணப்பத்துக்கு மறுமொழியாகக் கிடைத்த தரவுகளை மதிப்பீடு செய்வதற்கு குறிப்பிட்டளவு முயற்சி எடுக்கவேண்டிய நிலை இருந்தது. | நிகழ்ச்சி திட்டம் மற்றும் முன்னேற்ற அறிக்கை என்பன நிலையான அறிக்கையிடல் வடிவத்தை பயன்படுத்தவில்லை. நிகழ்ச்சி திட்டம் 400,000 நன்மை பெறுநரைக் குறிப்பிட்டிருந்தது. ஆனால், இது நாளாந்த, வாராந்த மற்றும் மாதாந்த இலாக்கா என்பதைக் குறிப்பிடவில்லை. இரண்டாம் காலாண்டில் இந்த திட்டம் ஆரம்பமாகும் என நிகழ்ச்சித் திட்டம் தெரிவித்தது. நிகழ்ச்சி திட்டம் 2019ம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரையான வாராந்த நன்மை பெருநர்களின் எண்ணிக்கையைக் குறிப்பிட்டிருந்தது. 2019ம் ஆண்டு மார்ச் முதல் டிசம்பர் வரையான வாராந்த நன்மை | 62.5 புள்ளிகளின் அடிப்படையில் இந்த தரவரிசை தீர்மானிக்கப்பட்டது (ஒதுக்கீட்டின் அடிப்படையில் சராசரி). 2019 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட இந்த அமைச்சின் கீழ் வரும் 1 திட்டத்துக்கான தகவல்களை வெளிப்படுத்தியதை அடிப்படையாகக் கொண்டு இந்தப் புள்ளி வழங்கப்பட்டுள்ளது. |

| வரவு செலவுத் திட்ட வா க்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்கா ணிப்பான் | முன்னேற்றக் கண்கா ணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | | பெருநர்களின் சராசரி எண்ணிக்கையைக் (அதாவது 400,000 நன்மை பெறுநரை) கொண்டு முன்னேற்றம் கணிக்கப்பட்டது. இச் செயல்திட்டம் மீதான பணி இரண்டாவது காலாண்டில் ஆரம்பிக்குமென இந் நிகழ்ச்சித் திட்டம் தெரிவித்தது. எனவே, ஏப்ரல் முதல் டிசம்பர் வரையான தகவல்கள் மாத்திரமே இவ் முன்னேற்ற மதிப்பீட்டிற்காக கவனத்தில் கொள்ளப்பட்டது.) | |
| தேவையுடையவர்களுக்கு துப்பரவேற்பாட்டு வசதிகளை வழங்கல் | வெளிப்படையற்றது | தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு |

| வரவு செலவுத் திட்ட வா க்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்கா ணிப்பான் | முன்னேற்றக் கண்கா ணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்தின் கீழ் தகவல்களுக்காக முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் கீழ் எந்த தகவலும் பெறப்படவில்லை. தகவல் அறியும் கோரிக்கை 2020 மார்ச் 12 அன்று அமைச்சகத்திடம் முன்வைக்கப்பட்டது. கொரோனா வைரஸ் பரவலால், தகவல்களைப் பெறுவதற்கான காலக்கெடு மார்ச் 16 முதல் மே 10 வரை தவிர்த்து கணக்கிடப்பட்டது. இருப்பினும், எதிர்பார்க்கப்பட்ட திகதிகளுக்கு முன்னர் தகவல்கள் பெறப்படவில்லை. வலைதளத் தேடுதல் மூலம் எந்த தகவலும் கிடைக்கவில்லை. | கருத்திட்ட முகாமைதுவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட இணைய வெளியில் கிடைக்கக்கூடிய தகவல்களின் அடிப்படையில், 2019ம் ஆண்டிற்கான இலக்குஇ 2019 செப்டம்பர் 30ம் திகதி 100 வீத முன்னேற்றமாகும். | 2019 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட 16 அரச நிறுவனங்களில் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு எட்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. அமைச்சினால் பெறப்பட்ட சராசரி 61.3 புள்ளிகளின் அடிப்படையில் இந்த தரவரிசை தீர்மானிக்கப்பட்டது (ஒதுக்கீட்டின் அடிப்படையில் சராசரி). 2019 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட இந்த அமைச்சின் கீழ் வரும் 7 திட்டங்களுக்கான தகவல்களை வெளிப்படுத்தியதை அடிப்படையாகக் |

| வரவு செலவுத் திட்ட வா க்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்கா ணிப்பான் | முன்னேற்றக் கண்கா ணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | | | கொண்டு இந்தப் புள்ளி வழங்கப்பட்டுள்ள து. |
| பேரூந்து நிலையங்கள் மற்றும் புகையிரத நிலையங்களில் துப்பரவேற்பாட்டு வசதிகளை மேம்படுத்தல் | மட்டுப்படுத்தப்பட்டது | முற்றாக நிறைவேறியது | தரவரிசை |
| | "தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்தின் கீழ், தகவல்களுக்காக முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் கீழ் எந்த தகவலும் பெறப்படவில்லை. தகவல் அறியும் கோரிக்கை 2020 மார்ச் 12 அன்று அமைச்சகத்திடம் முன்வைக்கப்பட்டது. கொரோனா வைரஸ் பரவலால், தகவல்களைப் பெறுவதற்கான காலக்கெடு மார்ச் 16 முதல் மே 10 வரை தவிர்த்து கணக்கிடப்பட்டது. இருப்பினும், | வாக்குறுதியின் முன்னேற்றத்தைக் கணிக்கத் தேவையான எவ்விதத் தகவலும் இல்லை | 2019 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட 16 அரச நிறுவனங்களில் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு எட்டாவது |

| வரவு செலவுத் திட்ட வா க்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்கா ணிப்பான் | முன்னேற்றக் கண்கா ணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்ட திகதிகளுக்கு முன்னர் தகவல்கள் பெறப்படவில்லை. வலைதளத் தேடுதல் மூலம் எந்த தகவலும் கிடைக்கவில்லை. கருத்திட்ட முகாமைதுவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட ""பாரிய அளவிலான மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திட்டங்களின் முன்னேற்றம்"" என்ற அறிக்கையின் மூலம் 2019 செப்டம்பர் 30 ஆம் தேதி வரை முன்னேற்றம் குறித்த தகவல்கள் பெறப்பட்டன. " | | இடத்தைப் பிடித்துள்ளது. அமைச்சினால் பெறப்பட்ட சராசரி 61.3 புள்ளிகளின் அடிப்படையில் இந்த தரவரிசை தீர்மானிக்கப்பட்டது (ஒதுக்கீட்டின் அடிப்படையில் சராசரி). 2019 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட இந்த அமைச்சின் கீழ் வரும் 7 திட்டங்களுக்கான தகவல்களை வெளிப்படுத்தியதை அடிப்படையாகக் கொண்டு இந்தப் புள்ளி |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | | | வழங்கப்பட்டுள்ளது. |
| வடக்கு மற்றும் கிழக்கில் செங்கல் மற்றும் சாந்து வகை வீடமைப்புத் திட்டம் | ஒத்துழைக்கப்பட்டது | முற்றாக நிறைவேறியது | சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு |
| | 2016ஆம் ஆண்டு தகவல் அறியும் சட்டத்தின் 12ஆம் இலக்கத்துக்கமைய மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்திற்கு அமைய முன்னேற்ற அறிக்கை கிடைக்கப்பெற்றது. இந்த அமைச்சின் மேற்பார்வையின் கீழ் முன்மொழியப்பட்ட பரிந்துரைகளிற்கு இரண்டு வெவ்வேறு விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட்டன. ஒரு விண்ணப்பத்துக்கு மட்டும் பதில் கிடைத்தது. எனினும் இத்தகவல் இரண்டு பரிந்துரைகளின் முன்னேற்றத்தையும் கணிப்பதற்குப் | கிடைக்கப்பெற்ற தரவுகளின்படி 31 டிசம்பர் 2019 வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றத்தின் அளவு 2019 ஆம் ஆண்டுக்கான இலக்கின் 91% ஆகும். முன்னேற்ற அறிக்கைக்கு அமைய மொத்த வீட்டுத்தொகுதிகளையும் அவற்றின் நிறைவு நிலையையும் கருத்தில் கொண்டு கணிப்பிடப்பட்டுள்ளது. | 2019 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட 16 அரச நிறுவனங்களில் சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி வசதிகள் அமைச்சு ஒன்பதாவது இடத்தைப் பிடித்துள்ளது. அமைச்சினால் பெறப்பட்ட சராசரி 55.9 புள்ளிகளின் அடிப்படையில் இந்த தரவரிசை தீர்மானிக்கப்பட்டது (ஒதுக்கீட்டின் |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | போதுமான தகவல்களை உள்ளடக்கியிருந்தது. ஆகையால் இந்த பதில்/மறுமொழி இரண்டு பரிந்துரைகளினதும் வெளிப்படைத்தன்மைக் கண்காணிப்பானுக்கு பரிசீலனை செய்யப்பட்டுள்ளது. | | அடிப்படையில் சராசரி). 2019 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட இந்த அமைச்சின் கீழ் வரும் 3 திட்டங்களுக்கான தகவல்களை வெளிப்படுத்தியதை அடிப்படையாகக் கொண்டு இந்தப் புள்ளி வழங்கப்பட்டுள்ளது.<br>வரவு செலவுத்திட்ட உரை |
| ஏற்றுமதி சந்தை அணுகல் மற்றும் தேசிய ஏற்றுமதி உபாயம் | ஒத்துழைக்கப்பட்டது | முற்றாக நிறைவேறியது | தரவரிசை |
| | 2016ஆம் ஆண்டு தகவல் அறியும் சட்டத்தின் 12ஆம் இலக்கத்துக்கமைய மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்திற்கு மறுமொழியாக முழு ஆண்டுக்குமான முன்னேற்றத்துக்கான தரவுகள் | கிடைக்கப்பெற்ற தரவுகளின்படி 31 டிசம்பர் வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றத்தின் அளவு 2019 ஆம் ஆண்டுக்கான இலக்கின் 83% ஆகும். | 2019 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட 16 அரச நிறுவனங்களில் கைத்தொழில் ஏற்றுமதி |

| வரவு செலவுத் திட்ட வா க்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்கா ணிப்பான் | முன்னேற்றக் கண்கா ணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | கிடைக்கப்பெற்றன. தேசிய ஏற்றுமதி மூலோபாயத்திற்கான நிகழ்ச்சித்திட்டம் வலைதள தேடல்களின் மூலம் கிடைக்கக்கூடியதாகவுள்ளது. ஆயினும், முன்னேற்றத்தைக் கணிப்பிடுவதற்கு இவை போதுமானதாக இருக்கவில்லை. ஆகவே, தகவல் அறியும் சட்டத்தின் மூலம் பெற்றுக்கொள்ளபட்ட தகவல்கள் முன்னேற்றத்தைக் கணிப்பீட்டிற்காக முழுமையாகப் பயன்படுத்தப்பட்டன. | 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவல் அறியும் உரிமை சட்டத்தின் படி தகவல்களைப் பெறுவதற்கு தாக்கல் செய்த விண்ணப்பத்திற்கு வழங்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையின்படி தேசிய ஏற்றுமதித் திட்டத்திற்கு (NES) முதலில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 1,140 மில்லியன் ஆகும். இதில் ரூ. 250 மில்லியன் புதிய முயற்சிகளுக்கும், ரூ. 890 மில்லியன் ஏற்கனவே தொடர்கின்ற முயற்ச்சிகளுக்கும் ஒதுக்கப்பட்டிருந்தன. வரவுசெலவுத்திட்ட அறிக்கை மற்றும் இணைப்புக்கள் ரூ. 250 மில்லியனைப்பற்றி மட்டும் தெரிவிப்பதால், இந்த பரிந்துரையின் நோக்க எல்லை தேசிய ஏற்றுமதித் | மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு ஆறாவது இடத்தைப் பிடித்துள்ளது.. |

| வரவு செலவுத் திட்ட வா க்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்கா ணிப்பான் | முன்னேற்றக் கண்கா ணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | | திட்டத்தின் புதிய முயற்சிகளை மட்டும் உள்ளடக்குவதாக அமைகின்றது. வரவுசெலவுத்திட்ட அறிக்கையில் சந்தை அணுகல் திட்டத்திற்காக (MAP) முதலில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு அமைச்சினால் தெரிவிக்கப்பட்ட தொங்கியுடன் ஒன்றிப்போகின்றது. மேலும் NESஇன் புதிய முயற்சிகள் மற்றும் MAP ஆகியவற்றுக்கான ஒதுக்கீடுகள் திருத்தப்பட்டதாகவும், அவ்வாறு திருத்தப்பட்ட ஒதுக்கீடுகளின்பாடு அறிக்கைகள் முன்னேறுவதாகவும் முன்னேற்ற அறிக்கை தெரிவிக்கின்றது. குறிப்பிட்ட முன்னேற்ற | |

| வரவு செலவுத் திட்ட வா க்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்கா ணிப்பான் | முன்னேற்றக் கண்கா ணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | | படிமுறைகள் மற்றும் திருத்தப்பட்ட ஒதுக்கீடுகளை உபயோகித்து கணக்கிடப்பட்ட சராசரியை வைத்து முன்னேற்றம் கணிப்பிடப்பட்டது. | |
| பிங்கிரிய மற்றும் வாகவத்தை கைத்தொழிற் பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் | ஒத்துழைக்கப்பட்டது | பகுதியளவு நிறைவேறியது | தரவரிசை |
| | 2016ஆம் ஆண்டு தகவல் அறியும் சட்டத்தின் 12ஆம் இலக்கத்துக்கமைய மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்திற்கு மறுமொழியாக முன்னேற்றத்துக்கான தரவுகள் கிடைக்கப்பெற்றன. | கிடைக்கப்பெற்ற தரவுகளின்படி செப்டம்பர் 31, 2019 வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றம் 2019ஆம் ஆண்டிற்கான இலக்கின் 52% ஆகும். இத்திட்டத்தின் உப-நடவடிக்கைகள் பற்றிய விபரம் மற்றும் அவற்றின் நிறைவு நிலை தொடர்பான விபரம் ஆகியவற்றை முன்னேற்ற அறிக்கை | 2019 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட 16 அரச நிறுவனங்களி ல் கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு ஆறாவது |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | | குறிப்பிட்டிருந்தது. எனினும் இவ்வுப நடவடிக்கைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் குறித்து இவ்வறிக்கையில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. ஆகவே ஒவ்வொரு உப-நடவடிக்கைக்கும் சம முக்கியத்துவம் கொடுத்து அவற்றின் சராசரியைக் கொண்டு முன்னேற்றத்திக் கணிப்பிடப்பட்டுள்ளது. | இடத்தைப் பிடித்துள்ளது. |
| கைத்தொழிற் பேட்டைகளை தாபித்தல் - காங்கேசந்துறை, மாந்தை கிழக்கு, பரந்தன், கொண்டச்சி, கிண்ணியா, சம்மாந்துறை மற்றும் திருகோணமலை | வெளிப்படையற்றது | தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சு |
| | 2016ஆம் ஆண்டு தகவல் அறியும் சட்டத்தின் 12ஆம் இலக்கத்துக்கமைய மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்திற்கு எவ்வித | வாக்குறுதியின் முன்னேற்றத்தைக் கணிக்கத் தேவையான எவ்விதத் தகவலும் இல்லை | 2019 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட 16 அரச நிறுவனங்களில் |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | தகவல்களும் கிடைக்கவில்லை. இணையத்தளத்திலும் இவ்வாக்குறுதியின் முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் கிடைக்கவில்லை. | | கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சு கூட்டாக இறுதி இடத்தைப் பிடித்துள்ளது. அமைச்சினால் பெறப்பட்ட சராசரி 0 புள்ளிகளின் அடிப்படையில் இந்த தரவரிசை தீர்மானிக்கப்பட்டது (ஒதுக்கீட்டின் அடிப்படையில் சராசரி). 2019 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட இந்த அமைச்சின் கீழ் வரும் 3 திட்டங்களுக்கா |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | | | ன தகவல்களை வெளிப்படுத்தியதை அடிப்படையாகக் கொண்டு இந்தப் புள்ளி வழங்கப்பட்டுள்ளது. |
| கல்வி சிறப்புத் தேர்ச்சிக்கான புலமைப்பரிசில் நிதியத்திற்கான (Scholarship for Educational Excellence (SEE) Fund) பங்களிப்பு | ஒத்துழைக்கப்பட்டது | கைவிடப்பட்டுள்ளது | நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை மேம்பாட்டு அமைச்சு |
| | நிகழ்ச்சித்திட்டம் மூலமாகவும், மற்றும் 2016ஆம் ஆண்டு தகவல் அறியும் சட்டத்தின் 12ஆம் இலக்கத்துக்கமைய மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்திற்கு மறுமொழியாகவும் முன்னேற்றத்துக்கான தரவுகள் கிடைக்கப்பெற்றன. | 2016ஆம் ஆண்டின் தகவல் அறியும் உரிமை இலக்கம் 12விற்கமைய மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவலின்படி இந்த வாக்குறுதி அமுல்படுத்தப்படவில்லை | 2019 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட 16 அரச நிறுவனங்களில் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி |

| வரவு செலவுத் திட்ட வா க்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்கா ணிப்பான் | முன்னேற்றக் கண்கா ணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | | என நிதி அமைச்சின் தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களம் தெரிவித்தது. | அமைச்சு கூட்டாக முதலாவது இடத்தைப் பெற்றுள்ளது. |
| உறுகுணை பல்கலைக்கழக இணைந்த சுகாதார விஞ்ஞான பீடத்தினை மற்றும் ஶ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூட வசதிகளை அபிவிருத்தி செய்தல் | மட்டுப்படுத்தப்பட்டது | கணிசமானளவு நிறைவேறியது | உயர் கல்வி, தொழிநுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சு |
| | 2016ஆம் ஆண்டு தகவல் அறியும் சட்டம் 12ஆம் இலக்கத்துக்கமைய மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்துக்கு பதிலாக தகவல்கள் கிடைக்கப்பெற்ற தகவல்கள் முன்னேற்றத்தைக் கணிப்பிடுவதற்குப் போதுமானதாக இல்லை.செப்டம்பர் 30, 2019 வரையான முன்னேற்றத்தின் அளவு பற்றிய தரவுகள் திட்ட | திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்திநாடாக இணையத்தில் கிடைக்கப்பெற்ற தரவுகளின்படி செப்டம்பர் 30, 2018 வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றம் 2019ஆம் | 2019 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட 16 அரச நிறுவனங்களில் உயர்கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க |

| வரவு செலவுத் திட்ட வா க்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்கா ணிப்பான் | முன்னேற்றக் கண்கா ணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தில் இருந்த "செப்டம்பர் 30, 2019 வரையில் பாரிய அளவு அபிவிருத்தித் திட்டங்கள் மாறும் நிகழ்ச்சிகளின் முன்னேற்ற நிலை (Progress of Large Scale Development Projects and Programmes as at 30th September 2019) என்னும் அறிக்கையின் மூலம் கிடைக்கப்பெற்றன. | ஆண்டிற்கான இலக்கின் 75% ஆகும். அவ்வருடத்திற்கான தகவல்கள் கிடைக்காத பட்சத்தில் இத்தரவுகளின் அடிப்படையில் முன்னேற்றம் கணிப்பிடப்பட்டுள்ளது. | அமைச்சு பத்தாவது இடத்தைப் பிடித்துள்ளது. அமைச்சினால் பெறப்பட்ட சராசரி 37.5 புள்ளிகளின் அடிப்படையில் இந்த தரவரிசை தீர்மானிக்கப்பட்டது (ஒதுக்கீட்டின் அடிப்படையில் சராசரி). 2019 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட இந்த அமைச்சின் கீழ் வரும் 1 திட்டத்துக்கான தகவல்களை வெளிப்படுத்தியதை அடிப்படையாக |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | | | க் கொண்டு இந்தப் புள்ளி வழங்கப்பட்டுள்ளது.<br><br>வரவு செலவுத்திட்ட உரை 106: பகுதியளவு பயன்படுத்தக்கூடிய தகவல்கள் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் இணையத்தளத்தில் கிடைக்கப்பெற்றன. |
| வீட்டில் குருதி சுத்திகரிப்பு செய்யக்கூடிய இயந்திரங்களை வழங்குதல் மற்றும் மீள் | ஒத்துழைக்கப்படாதது | தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | சுகாதார மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சு |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| பிரசாரண நீர் சுத்திகரிப்பு பொறிகளுடனான குருதி சுத்திகரிப்பு நிலையங்களை வலுப்படுத்தல் | | | |
| | 2016ஆம் ஆண்டு தகவல் அறியும் சட்டத்தின் 12ஆம் இலக்கத்துக்கமைய மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்திற்கு மறுமொழியாக முன்னேற்றத்துக்கான தரவுகள் மற்றும் செயல் திட்டம் கிடைக்கப்பெற்றன. பல்வேறு தடவைகள் பல்வேறு தகவல் உத்தியோகத்தர்களிடம் நாம் அனுப்பப்பட்டபடியினால் இவ்விண்ணப்பத்தை மேற்கொள்ளுதல் சற்று சிரமமான காரியமாக இருந்தது. இறுதியில் நாம் இந்த விண்ணப்பத்தை தேசிய சிறுநீரக மையத்துக்கு அனுப்பினோம். எனினும், கிடைக்கப்பெற்ற தகவல்கள், குறிப்பிட்ட பரிந்துரைக்கு தொடர்பில்லாமல் இருந்தது. | வாக்குறுதியின் முன்னேற்றத்தைக் கணிக்கத் தேவையான எவ்விதத் தகவலும் இல்லை | 2019 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட 16 அரச நிறுவனங்களில் சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சு கூட்டாக இறுதி இடத்தைப் பிடித்துள்ளது. அமைச்சினால் பெறப்பட்ட சராசரி 0 புள்ளிகளின் அடிப்படையில் இந்த தரவரிசை தீர்மானிக்கப்பட் |

| வரவு செலவுத் திட்ட வா க்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்கா ணிப்பான் | முன்னேற்றக் கண்கா ணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | ஆதலால் முன்னேற்றத்தைக் கணிப்பிட இயலாதிருந்தது. | | டது (ஒதுக்கீட்டின் அடிப்படையில் சராசரி). 2019 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட இந்த அமைச்சின் கீழ் வரும் 1 திட்டத்துக்கான தகவல்களை வெளிப்படுத்தியதை அடிப்படையாகக் கொண்டு இந்தப் புள்ளி வழங்கப்பட்டுள்ளது. |
| சுகிதபுரவர நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | வெளிப்படையானது | கணிசமானளவு நிறைவேறியது | நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | | | வசதிகள் அமைச்சு |
| | அமைச்சின் இணையத்தளத்தில் கிடைக்கப்பெற்ற செயல்திட்டம் மற்றும் முன்னேற்ற அறிக்கையின் மூலம் தகவல்கள் பெறப்பட்டன. 2016ஆம் ஆண்டு தகவல் அறியும் சட்டம் 12ஆம் இலக்கத்துக்கமைய மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பமும் இணையத்தில் அடங்கியுள்ள தரவுகளையே சுட்டிக்காட்டின. | கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில், 2019 ஆம் ஆண்டுக்கான முன்னேற்றத்தின் அளவு அவ் ஆண்டிற்கான இலக்கின் 79 வீதமாக கணிக்கப்பட்டது. முழு ஒதுக்கீடுகள், நிகழ்ச்சித்திட்ட அறிக்கை மற்றும் முன்னேற்ற அறிக்கை என்பனவற்றில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் என்பன இணங்கவில்லை. அதாவது, 200 மில்லியன் ரூபா எனக் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் நிகழ்ச்சித்திட்டதில் குறிப்பிடப்பட்டுள்ள போதும், முன்னேற்ற அறிக்கையில் காணப்படவில்லை. இச் செயற்பாடுகள் 100 % பூர்த்தியானவையாகக் | 2019 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட 16 அரச நிறுவனங்களில் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு எட்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. அமைச்சினால் பெறப்பட்ட சராசரி 61.3 புள்ளிகளின் அடிப்படையில் இந்த தரவரிசை தீர்மானிக்கப்பட்டது |

| வரவு செலவுத் திட்ட வா க்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்கா ணிப்பான் | முன்னேற்றக் கண்கா ணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | | கொள்ளமுடியும். மீதமுள்ள செயற்பாடுகளின் முழுமைத்தன்மைத் தன்மையின் அளவு, முன்னேற்ற அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்டது. பிரேரணையின் ஒட்டுமொத்த முன்னேற்றமானது, அனைத்துச் செயற்பாடுகளின் சராசரி முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்டது. | (ஒதுக்கீட்டின் அடிப்படையில் சராசரி). 2019 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட இந்த அமைச்சின் கீழ் வரும் 7 திட்டங்களுக்கா ன தகவல்களை வெளிப்படுத்திய தை அடிப்படையாக க் கொண்டு இந்தப் புள்ளி வழங்கப்பட்டுள் ளது. |
| பேரை வாவியின் நீர் தரத்தினை சீர்ப்படுத்தல | மட்டுப்படுத்தப்பட்டது | தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | அமைச்சினுடைய இணையத்தளத்தில் வாக்குறுதியின் நிகழ்ச்சித்திட்டம் கிடைக்கப்பெற்றது. மேலும், திருத்தப்பட்ட ஒதுக்கீட்டுடன் கூடிய புதுப்பிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டமும் RTI விண்ணப்பம் மூலம் கிடைக்கப்பெற்றது. இது தொடர்பான முன்னேற்ற அறிக்கை அமைச்சின் இணையத்தளத்தில் கிடைக்கும் என RTI விண்ணப்பத்திற்கான பதில் தெரிவித்தபோதும் அது இணையத்தளத்தில் இருக்கவில்லை. | 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவல் அறியும் உரிமை சட்டத்தின் படி மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்திற்கமைய திருத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் வழங்கப்பட்டது. இதன்படி, குறிப்பிட்ட முன்னேற்ற அறிக்கையை அமைச்சின் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம் என அந்த தகவலில் தெரிவிக்கப்பட்டது. எனினும், அதனைப்பெற முடியவில்லை. ஆகையால், கிடைக்கப்பெற்றிருக்கும் தரவுகள் வாக்குறுதியின் முன்னேற்றத்தை மதிப்பிடப் போதுமானதாக இல்லை. | 2019 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட 16 அரச நிறுவனங்களில் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு எட்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. அமைச்சினால் பெறப்பட்ட சராசரி 61.3 புள்ளிகளின் அடிப்படையில் இந்த தரவரிசை தீர்மானிக்கப்பட்டது (ஒதுக்கீட்டின் அடிப்படையில் |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | | | சராசரி). 2019 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட இந்த அமைச்சின் கீழ் வரும் 7 திட்டங்களுக்கான தகவல்களை வெளிப்படுத்தியதை அடிப்படையாகக் கொண்டு இந்தப் புள்ளி வழங்கப்பட்டுள்ளது. |
| யாழ்ப்பாண நகர மண்டப மீள்நிர்மாணம் | ஒத்துழைக்கப்பட்டது | முற்றாக நிறைவேறியது | நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு |
| | 2016ஆம் ஆண்டு தகவல் அறியும் சட்டத்தின் 12ஆம் | கிடைக்கப்பெற்ற தரவுகளின்படி 31 டிசம்பர் | 2019 ஆம் ஆண்டில் |

| வரவு செலவுத் திட்ட வா க்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்கா ணிப்பான் | முன்னேற்றக் கண்கா ணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | இலக்கத்துக்கமைய மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்திற்கு மறுமொழியாக முன்னேற்றத்துக்கான தரவுகள் மற்றும் செயல் திட்டம் கிடைக்கப்பெற்றன. மேலும், அமைச்சின் இணையத்தளத்திலும் இத்தகவல்கள் கிடைக்கப்பெற்றன. எனினும் இவ்விரு மூலங்களினூடாகவும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் ஒன்றுடன் ஒன்று ஒன்றிப்போகவில்லை. எனினும் பிரசுரிக்கப்பட்ட திகதி மற்றும் மூலங்கள் கிடைக்கப்பெற்ற திகதியில் அடிப்படையில் RTI விண்ணப்பத்திற்கு கிடைத்த மறுமொழியை மிகவும் பிந்திய தரவுகளைக் கொண்டதாகக் கருத்தில் கொள்ளப்பட்டது. RTI மறுமொழியே மிகவும் பிந்திய தகவல்களைக் கொண்டதாக அமைச்சின் தகவல் உத்தியோகத்தரினால் வாய்மூலம் உறுதிசெய்யப்பட்டது. ஆகையால், | 2019 வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றத்தின் அளவு 2019 ஆம் ஆண்டுக்கான இலக்கின் 83% ஆகும். 2016ஆம் ஆண்டின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் (RTI) இலக்கம் 12 விற்கமைய மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்திற்கு வழங்கப்பட்ட தகவல்களுக்கமையவும் குறித்த அமைச்சின் இணையதளத்திலிருந்தும் முன்னேற்றம் தொடர்பான தரவுகள் பெறப்பட்டன. இருந்தபோதிலும், RTI தகவலில் மற்றும் அமைச்சின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்ட பூரணப்படுத்தப்பட்ட முன்னேற்றப் படிமுறைகள் ஒன்றுடன் ஒன்று | மதிப்பிடப்பட்ட 16 அரச நிறுவனங்களில் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு எட்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. அமைச்சினால் பெறப்பட்ட சராசரி 61.3 புள்ளிகளின் அடிப்படையில் இந்த தரவரிசை தீர்மானிக்கப்பட்டது (ஒதுக்கீட்டின் அடிப்படையில் சராசரி). 2019 ஆம் ஆண்டில் |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | அமைச்சின் இணையத்தளத்தில் கிடைக்கப்பெற்ற தரவுகள் உபோயிக்கப்படமுடியாது என கருத்தில்கொள்ளப்பட்டது. | ஒன்றிப்போகவில்லை. இவ்விரு மூலங்களின் பிரசுரிக்கப்பட்ட திகதி மற்றும் கிடைக்கப்பெற்ற திகதிக்கமைய RTI தரவுகள் மிகவும் பிந்திய தகவல்களாக தெரிவுசெய்யப்பட்டது. இதனை அமைச்சின் தகவல் அதிகாரியும் வாய்மூலமாக உறுதிப்படுத்தினார். குறிப்பிட்ட விண்ணப்பத்திற்கு வழங்கப்பட்ட தகவலில் ரூ. 550 மில்லியன் திருத்தப்பட்ட ஒதுக்கீடாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | மதிப்பிடப்பட்ட இந்த அமைச்சின் கீழ் வரும் 7 திட்டங்களுக்கான தகவல்களை வெளிப்படுத்தியதை அடிப்படையாகக் கொண்டு இந்தப் புள்ளி வழங்கப்பட்டுள்ளது. |
| மலையக மரபுரிமையினை பேணிப் பாதுகாத்தல் | ஒத்துழைக்கப்பட்டது | முற்றாக நிறைவேறியது | புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சு |
